பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 17 (29—2—68) வியாழன் ★ வெளியூர்: மாசி 18 (1—3—68) வெள்ளி [இதழ்: 215

கோவை கொடி எரிப்பு நிகழ்ச்சி-தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

சட்டமன்றத்தில் அதை விவாதிக்க வேண்டிய பிரச்சினை எழவில்லை

எதிர்க் கட்சிக் குற்றச்சாட்டுக்கு அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி மறுப்பு-விளக்கம்

சென்னை, பிப் 29—

கோவையில் மாணவர்கள் தேசியக் கொடியை எரித்தது தொடர்பாக அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி, அதுபற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காக அவை நிகழ்ச்சி நிரலை ஒத்திவைக்க வேண்டும் எனக் கோரி, எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி.ஜி. கருத்திருமன் கொண்டுவந்திருந்த தீர்மானம், இன்று சட்டமன்றத்தில் அவைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

'இப்படிப்பட்ட செயல்களைத் தடுக்க இம்மாநிலத்தில் தனிச் சட்டமே இருக்கிறது' என்றும், 'சட்டப்படி நடவடிக்கை எடுப்பது அன்றாட நிர்வாகத்தைப் பொறுத்தது' என்றும் அவைத் தலைவர் கூறி, 'இந்தப் பிரச்சினை எந்த முறையில் அன்றாட நிர்வாகப் பணிகளுக்கு அப்பாற்பட்ட தனித் தன்மை வாய்ந்தது' என்பதையும் அவை நிகழ்ச்சிகளை ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களையும் விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. கருத்திருமன்:—"நமது மாநிலத்தில் தனிச் சட்டம் இருப்பது தெரியும்; இருந்தாலும், இது திட்டமிட்ட செயலாக இருந்திருக்கிறது; இரண்டாயிரம் மாணவர்கள் கூடி, வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொடியை எரித்திருக்கின்றனர்; இதைக் காவல் துறையினர் ஏன் தடுக்கவில்லை? 'சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை' என்பதே என் குற்றச்சாட்டு."

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்:—"கோவையில் நடந்த சம்பவம் குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சட்ட நிபுணர்களின் யோசனை கேட்கப்பட்டிருக்கிறது. கொடியை எரித்தவர்களைக் காவல் துறையினர் கைது செய்து பொறுப்பில் விடுவித்திருக்கின்றனர். சட்டப்படி நடவடிக்கை எடுப்பது நிலவும் சூழ்நிலையைப் பொறுத்தே அமையும். விபரீதம் ஏதும் ஏற்படாவண்ணமே நடவடிக்கை எடுக்கவேண்டும். சில காரியங்களை முன்கூட்டியே தடுக்கலாம்—சிலவற்றைச் சூழ்நிலைக்கேற்பத்தான் செய்ய முடியும். எந்த முறையில் நடவடிக்கை எடுத்தால் விபரீதம் ஏற்படாமல் இருக்கும் என்பதைக் கண்டறிந்து, காவல் துறையினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எனவே, குற்றஞ்செய்தவர் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

"நாடாளுமன்றத்தில்கூட இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது அங்குள்ள அமைச்சர், தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும், நிலைமையைக் கூர்ந்து டில்லி அரசு கவனித்துவருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே, அதிக விபரீதம் ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். இது சட்டத்துக்கு அப்பாற்பட்டதல்ல. சட்டத்திற்கேற்ப முறைப்படித்தான் பரிகாரம் காண முடியும்."

கருத்திருமன்:—"இந்தக் குற்றம் நிகழ்வதற்குமுன், முன்கூட்டியே ஏன் தடுக்கவில்லை என்பது என் குற்றச்சாட்டு."

அமைச்சர் மு. கருணாநிதி:—"கோவையில் கொடியை எரிக்கப்போவதாக யாருடைய பெயரும் முன்கூட்டி அறிவிக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் சட்ட எரிப்பு அறப்போராட்டம் நடத்தியபோது, முன்கூட்டியே, 'இன்னின்ன இடத்தில் இன்னின்னார் அரசியல் சட்டத்தை எரிப்பார்கள்' என்று பட்டியல் வெளியிட்டிருந்தும்கூட, போலீசார் முன்கூட்டிக் கைது செய்யாமல், சட்டத்தை எரித்து முடிக்கும்வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அதன் பிறகுதான் கைது செய்தார்கள் என்பதும், கொளுத்தப்பட்டபின் வழக்குப் போட்டால்தான் வழக்கு நிற்கும் என்பதால் அப்படிச் செய்தார்கள் என்பதும் எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்."

இரா. நெடுஞ்செழியன்:—"'கொடியை எரிக்கப் போகிறேன்' என்று அறிவித்த பிறகுகூடக் கடைசி நேரத்தில் யாரேனும் தலையிட்டு, எரிக்காமல் தடுத்துவிடக்கூடும். ஆகையால்தான் காவல் துறையினர், உசிதப்படி நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள்."

அவைத் தலைவர்:—"இது அன்றாட நிர்வாகப் பிரச்சினைகளுக்குட்பட்டிருப்பதால், இதை விவாதிப்பதற்காகச் சட்டமன்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை.

கூட்டுறவு நூற்பாலை இயக்குநர் அனைவரும் ஆளுங்கட்சியினரா?

'முன்னைய கொள்கையை இந்த அரசு கடைபிடிக்கவில்லை'

எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுக்கு இரா. நெடுஞ்செழியன் பதில்

சென்னை, பிப். 29—

இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில், கூட்டுறவு நூற்பாலைகள் பற்றிய கேள்வி எழுந்தபோது, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. விநாயகம், பின்வருமாறு ஒரு துணைக் கேள்வியைக் கேட்டார்:—

'இந்தக் கூட்டுறவு ஆலைகளில் இயக்குநர்களாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களையே முழுக்க முழுக்க நியமிப்பதை விடுத்து எல்லாக் கட்சியினருக்கும் வாய்ப்பளிக்க ஆவன செய்யப்படுமா?"

அமைச்சர் நெடுஞ்செழியன்:—

"கூட்டுறவு ஆலைகளில் இயக்குநர்களை நியமிப்பதில் பழைய முறையை இந்த அரசு கடைபிடிக்கவில்லை என்பது, இயக்குநர்களின் பட்டியலைப் பார்த்தாலே புரியும். குறிப்பிட்ட ஓர் அரசியல் கட்சிக்காரர்களையே முழுக்க முழுக்க நியமிக்கவும் இல்லை; எந்தக் கட்சியினரையும் புறக்கணிக்கவும் இல்லை; பரவலாகத்தான் நியமித்திருக்கிறோம். ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப எல்லாக் கட்சியினரும் இடம் பெற்றிருக்கிறார்கள். முன்பிருந்த முறையை இந்த அரசு கடைபிடிக்கவில்லை."

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் கிளர்ச்சி

அமைதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை—அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 29—

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திவரும் கிளர்ச்சி குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காக சுதந்தராக் கட்சி உறுப்பினர் திரு. எச். வி. ஹண்டே இன்று சட்டமன்றத்தில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில், அவை முன்னவரான அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறியதாவது:—

"அங்குள்ள பேராசிரியர் ஒருவர் மீது குற்றஞ்சாட்டி—அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி மாணவர்கள் கிளர்ச்சி ஆரம்பித்தனர். அது பற்றிச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அந்தப் பல்கலைக்கழக சிண்டிகேட் ஆவனசெய்து வருகிறது. அந்தப் பேராசிரியர்மீது விசாரணை நடத்த முறைப்படி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இப்போது, 'அந்தப் பேராசிரியரை வேலையிலிருந்தே நீக்கிவிட வேண்டும்' என்று கிளர்ச்சி செய்கின்றனர்.

"அங்கு அமைதியான சூழ்நிலை ஏற்படுத்த இந்த அரசும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாவட்ட ஆட்சியரிடம் தொடர்புகொண்டு அங்கு என்ன செய்ய இயலுமோ அதைச் செய்யுமாறு கூறியிருக்கிறோம்.

"இன்று காலைகூட, மாவட்ட ஆட்சியரிடம் தொடர்பு கொண்டு பேசினேன்; 'அந்தப் பேராசிரியரே இராஜினாமா செய்ய விருப்பம் இருக்கிறதா' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கேட்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியரும் எல்லா வழிகளிலும் அமைதி ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்; எனவே, இதைப் பற்றி இங்கு விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை."

அவைத் தலைவர் தமது தீர்ப்பில், 'இந்தப் பிரச்சினை அன்றாட நிர்வாக நடவடிக்கைகளைப் பொறுத்ததால் ஒத்திவைப்புக்கு அவசியமில்லை' எனத் தீர்ப்பளித்தார்.

திருப்பூரில் பால் குளிர் பதனச் சாதனம்

சென்னை, பிப். 28—

"திருப்பூர் பால் கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிர் பதனம் செய்யும் இயந்திரம் 13—8—67 முதல் இயங்கிவருகிறது; நாள் ஒன்றுக்கு 1230 லிட்டர் பால் அங்கு குளிர்பதனம் செய்யப்படுகிறது; தற்போது இதன் மூலம் நட்டம் ஏற்பட்டபோதிலும் போதிய அளவு பால் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டால் நட்டம் ஏற்படாது; நட்டத்தைத் தவிர்க்கத்தக்க முயற்சிகள் செய்யப்படுகிறது"

என்று சட்டமன்றத்தில், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், திருப்பூர் சு. துரைசாமி கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தந்தைக்காகப் பிள்ளைகள் போராட்டம்

போலீசு சப்-இன்ஸ்பெக்டராகப் பணிபுரியும் தங்கள் தந்தையின் அலுவல்முறைக் கோரிக்கைகள் சிலவற்றுக்காக, மூன்று முதல் 17 வயது வரையுள்ள ஐந்து சிறுவர்கள், நாகப்பூருக்கு அருகிலுள்ள 'சித்தபுல்டி' போலீசு நிலையம் ஒன்றின்முன், 'சத்தியாக்கிரகம்' நடத்தினர்—உண்ணா நோன்பும் இருந்தனர்!

போலீசார், அந்த ஐவரையும் கைது செய்திருக்கின்றனர்!

'தபால்'—'தந்தி' என்ற இரண்டையும் காரணத்தோடுதான் இணைத்து வைத்தார்கள், அந்த நாளில்!

'தபாலும், தந்திபோல் பாவிக்கப்படவேண்டும்' என்ற நோக்கம் தான், இரண்டையும் ஒரு குடையின்கீழ் அமைத்ததற்கான புத்திசாலித்தனமாக இருக்க முடியும்.

ஆனால், எல்லாமே நினைப்பது போல் நடந்துவிடுவதில்லை! சமயத்தில் நேர்மாறாகவும் நடந்து விடுகிறது!

தந்தியைப்போல் தபால் பாவிக்கப்படுவதற்குப் பதிலாக, 'தந்தியே தபாலைப்போல் பாவிக்கப்படும்' நிலை இருப்பதை, 'இல்லை' என்று யார் கூறமுடியும்?

கடிதப் பட்டுவாடாவில் மட்டுமல்ல—அந்தக் கடிதங்களை விற்பனை செய்யும் முறையிலும் அவ்வப்போது பல அசம்பாவிதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன!

ஐந்து காசு ஸ்டாம்புகள், திடீரென்று 'சப்ளை' குறையும்; மணியார்டர் பாரங்கள் 'இல்லை' என்ற அறிவிப்புக் கிடைக்கும்; 'பத்துக் காசு கவர் பஞ்சம்' என்ற செய்தியும் வரும்; 'கார்டு தனியாக இல்லை; ரிப்ளை கார்டாக வாங்கிக் கிழித்துக்கொள்ளுங்கள்' என்றும் கூறுவார்கள்!

இவையெல்லாம், அவ்வப்போது நாம் பார்க்கும் சம்பவங்கள்! 'வாசகர்கள் கடிதங்கள்' முதல் பத்திரிகைகளின் தலையங்கங்கள் வரையில் விமர்சிக்கப்பட்ட விஷயங்கள்!

பத்துக் காசு உள்நாட்டு கவர் பற்றாக்குறை என்பதற்காக இப்போது, மாராட்டிரம்—வங்காளம் — புதுடில்லி — தமிழ்நாடு ஆகிய இடங்களில் தற்காலிகத் துரிதத் தயாரிப்பாகப் புதியவித கவர்களை அச்சிட்டு வெளியிடப் போகிறார்களாம்!

இத்தனை ஆண்டுகள் அனுபவமும் திறமையும் பெற்ற பின்புகூட, இதுபோன்ற சாதாரணத் தவறுகளை—தாமதங்கள் விளைவிக்கும் பெரிய சங்கடங்களை அந்த இலாகா இன்னமும் உணராமல் இருப்பதுவியப்பாகவும், வேதனையாகவும்தான் இருக்கிறது!

முன்கூட்டி எச்சரிக்கையாக இல்லாத தன்மை—தேவையறிந்து பொருள்களை விநியோகிக்காமை ஆகிய குறைகள்—ஏதோ ஒரு மூலையில் நடைபெறும் தவறு அல்லது அசிரத்தை — தபால் இலாகாவின் முழுப் பெயரையும் எப்படிப் பாதிக்கின்றன என்பதன் விபரீதத்தினைப் பொறுப்பில் உள்ளவர்கள் இன்னமும் முழுமையாக உணரவேண்டும்.

'சரியான முகவரி எழுதுங்கள்' என்ற வேண்டுகோளுடன், தபால்-தந்தி வாரம் கொண்டாடப்படுகிறது. அந்தச் சரியான முகவரியைப் போலவே, முக்கியமான 'எக்ஸ்பிரஸ்' — 'ஏர் மெயில்' போன்ற 'லேபிள்'களைக் கேட்டால், 'இல்லை' என்றோ, அல்லது 'கையிருப்பில் இல்லை' என்றோ கூறும் தபால் நிலையங்கள் எத்தனையோ ஆயிரங்கள் உள்ளன!

'தபால்' கதையே இப்படியென்றால், அதனுடன் சேர்ந்த 'தந்தி'யின் நிலைமையைச் சொல்லியா விளக்க வேண்டும்!

—எஸ். ஆர்.

மலைக்குமளவுக்குச் செலவிட்டும் மக்கள் வாழ்க்கை நிலை உயரவில்லை!

உற்பத்தி பெருகாமல் திட்டச் செலவு கூடியதால் விலைவாசி உயர்ந்தன !

திட்டமிட்ட பொருளாதாரத்தின் விந்தை தரும் விளைவுகள் !

ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் நாட்டில் நிலவிய நிலையும் இன்றைய பொறுப்பும் --- அண்ணா விளக்கம்

"இன்றையச் சமுதாயத்தில் அரசு ஆற்றவேண்டிய பங்கு பற்றிய நமது எண்ணங்களிலே ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே வரவு--செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும் செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலை மாறிவிட்டது !

"குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே தற்கால வரவு-செலவுத் திட்டம் அமைகிறது !

"இவ்வரசின் ஓராண்டு நிறைவோடு, இவ்வரவு-செலவுத் திட்டமும் இணைந்து அமைகிறதாதலின், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகளும், வரும் ஆண்டின் வரவு--செலவுத் திட்ட மதிப்பீடுகளும், மக்கள்முன் சிறப்புற வைத்த கொள்கைகளை அரசு நிறைவேற்றுவதில் எவ்வாறு பயன்படும் வண்ணம் அமைந்துள்ளனவென்பதை இத்தருணத்தில் சற்று விரிவாக நான் விளக்க வேண்டுமென இப்பேரவை எதிர்பார்ப்பது சாலப் பொருத்தமாகும்"

என்று தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், 1968-69-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

புதிய அரசு பதவியேற்றபோது நாட்டில் நிலவிய பொருளாதார நிலையையும், எப்படிப்பட்ட இக்கட்டான நிலையைத் தமிழக அரசு கடக்கவேண்டியிருந்தது என்பதனையும், அது ஏற்றுள்ள எதிர்காலப் பொறுப்புக்களையும் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியதாவது :—

இந்த அரசு பதவி ஏற்குங்காலையில் நாட்டிலே நிலவிய பொருளாதார நிலையைப் பற்றி இம்மாமன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவர வேண்டியிருப்பதை இம்மன்றம் பொறுத்தருளுமென நம்புகின்றேன்.

அவ்வமயம், மூன்றும் திட்டம் முழுமையாக நிறைவு பெற்று, 'நான்காம் திட்டம் முடிவு செய்யப்படுமா' என்கிற ஐயப்பாடு தெளியாமலே ஆண்டு ஒன்றும் கடந்து நின்றது.

நிதியளவில் பார்க்கும்போது, மூன்றும் திட்டம் எதிர்பார்த்த அளவிற்கு மேலாகவே நிறைவேற்றப்பட்டிருந்தது. முதற்கண் ரூ. 7,500 கோடி மட்டுமே வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கத்திற்கு மாறாக, ரூ. 8,630 கோடி அளவில் செலவினம் உயர்ந்திருந்தது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கூடுதல் வரி இனங்களை ஏற்றதன் மூலம், தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தியாகத்தையும் நாட்டு மக்கள் செய்து முடித்தார்கள்.

அத்திட்டத்தில் திரட்டக் கருதியிருந்த ரூ. 1,710 கோடி கூடுதல் வரிகளுக்கு மாறாக, மத்திய—மாநில அரசுகள் கூடுதல் வரிகளின் வாயிலாக ரூ. 2,880 கோடி அளவிற்கு நிதி வசதிகளைத் திரட்டின.

முதற்கண் மதிப்பிடப்பட்ட ரூ. 1,100 கோடி அளவுக்கு மாறாக, மத்திய அரசு மட்டும் விதித்துச் செயல்படுத்திய வரிகளின் மூலம் ரூ. 2,270 கோடி அளவிற்கு மக்கள்மீது கூடுதலாகச் சுமை ஏற்றப்பட்டது.

செழுங்குடி மக்கள்மீது விழும் வருமான வரி, நிறுவன வரி (Corporation Tax), சொத்து வரி போன்ற நேர்முக வரிகள் மூலம் ரூ. 320 கோடி மட்டுமே மத்திய அரசு திரட்டியது; எஞ்சிய தொகை, பாமர மனிதனின் அன்றுட வாழ்க்கைச் செலவின் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தவல்லதும், உற்பத்திச் செலவுகளை பெருமளவிற்குக் கூட்டும் வகையிலுமுள்ள ஆயத் தீர்வை—சுங்க வரிகள்-இரயில் கட்டணங்களில் செய்த சரிக்கட்டுதல்கள் போன்ற மறைமுக வரிகளின் வடிவில் எழுப்பப்பட்டது.

நிதி அளவில் திட்டம் எதிர்பார்த்த அளவிற்குமேல் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், முக்கியமான துறைகளில் குறிக்கோள் அளவுகள் பெரும் அளவிற்கு எய்தப்படவில்லை!

1964—65-ம் ஆண்டு ஒன்றைத் தவிர, மூன்றும் திட்டக் காலத்தில் வேளாண்மை விளைச்சல் எந்தவகையிலும் உயரவில்லை.

1965—66-ல், 10 கோடி டன் உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்பது குறிக்கோள் அளவு; ஆனால், 7.3 கோடி டன் உணவுத் தானியங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன.

நாட்டு வருவாய் ஆண்டுதோறும் சராசரி 5 சதவீதம் வளர்ச்சி அடைய வேண்டுமென்கிற குறிக்கோள் அளவிற்கு எதிராக 2.8 சதவீத அளவில் மட்டுமே வளர்ச்சியடைந்தது.

மக்கள் தொகை நிலையாக வளர்ச்சியடைந்து வந்ததால், நபர்வாரி வருவாய் மூன்றும் திட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி 0.3 சதவீத அளவில் மட்டுமே வளர்ச்சியடைந்ததாகக் கணக்கிடப்பட்டது.

இவ்வாறாக, மலைப்பு எய்தும் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருந்தும்—கூடுதல் வரிகளின் வடிவில் மக்கள் கணிசமான அளவிற்கு அல்லல்பட்டபோதிலும், நமது மக்களின் வாழ்க்கை நிலை எவ்வகையிலும் வளர்ச்சி பெறவில்லை!

வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் நிறைவேறாது போனதோடு, திட்டத்தின் பெயரால் பெருந் தொகைகள் செலவிடப்பட்டதும் ஒன்று சேர்ந்து, விலைவாசிகளின் ஏற்றத்தை மேலும் உயர்த்தி பெரும்பான்மையான மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தின!

மூன்றும் திட்டக்கால அளவை முழுமையாக எடுத்துக்கொண்டால், அதற்கு முந்திய 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வினைவிட மிக அதிக அளவில் 36.4 சதவீத அளவிற்கு விலைவாசிகள் உயர்ந்தன!

இவ்விலைவாசிகளின் பொதுவான ஏற்றம் ஒருபுறமிருக்க, உணவுப் பொருள்களின் விலைவாசிகள் மட்டும் 48 சதவீதம் உயர்ந்தன!

விலைவாசிகள் துறையில் 1966-67-லும் எவ்வித மேம்பாடும் காணப்படவில்லை!

1966 ஜூன் திங்களில் ரூபாயின் நாணயமாற்று வீதம் குறைக்கப்பட்டதால் நிலைமைமேலும் சீர்கேடுற்றது! அதன் காரணமாக 1966—67-ல் விலைவாசிகளின் அளவு 16.5 சதவீதம் உயர்ந்தது?

உணவுத் தானிய விலைகளின் செங்குத்தான ஏற்றத்தினலும், வேளாண்மை உற்பத்தியின் வீழ்ச்சியினலும் பாமர மக்களின் வாங்கும் திறன் கடுமையாகக் கரைய முற்பட்டது!

இதன் விளைவாகத் தொழில் துறைப் பொருள்களின் தேவை பெரிதும் சரிந்து, தொழில்களில் மந்த நிலையும் வேலையின்மையும் மலிந்தன!

இவ்வண்ணம் பல தொழில்களில் உற்பத்தித் திறன் ஒரு புறம் விஞ்சிய நிலையை அடைந்திருந்தும், அதே நேரத்தில்,மறுபுறம் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமலுள்ள முரண்பாடான நிலையொன்று உருவாயிற்று!

இவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் காப்பதே திட்டமிட்ட பொருளாதாரத்தின் குறிப்பிட்ட நோக்கமாக இருத்தல் வேண்டும் எனினும், இந்நிலை ஏற்பட்டது விந்தையே.

இதுதான், இந்த மாநில அலுவல்களை நடத்துவதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட போது எங்களை எதிர்நோக்கியிருந்த பொருளாதார நிலையாகும்.

நமது மக்கள்முன் நின்ற சிக்கல்களுக்குச் செவ்விய முறையில் தீர்வு காண்பது முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை என்பதும் விரைவில் தெளிவாகியது.

அரசியலமைப்பில் செய்துள்ள அதிகார வரம்பின்கீழ், நாணயச் செலாவணியை முறைப்படுத்துதல் — வங்கி அலுவல்கள் — அயல் நாட்டு வாணிபம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கிற மத்திய அரசு மட்டுமே, நமது பொருளாதாரம் எந்த வழிகளில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று வரையறுக்கும் நிலையிலுள்ளது.

மக்களின் நலனைக் கருதி இந்த அரசு அவசியமென்று கருதக் கூடிய திட்டங்களுக்கு மத்திய அரசு பொருத்தமான பொருளாதாரக் கோட்பாடுகளின் வாயிலாக ஆதரவு அளித்தாக வேண்டும்.

இந்தச் சூழலில், பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் பணி, மத்திய—மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகுமென்பதும், இதில் மத்திய அரசின் பங்கு மேலோங்கி நிற்பதும் வெள்ளிடைமலையாகும்.

எனவே, நமது மக்களை எதிர்நோக்கியுள்ள பொருளாதார இடர்ப்பாடுகளுக்குத் தற்போதைய இவ்வரவு-செலவுத் திட்டம், 'செவ்விய முறையில் துயர் தணிப்பு அளிக்கிறதா' என்று முடிவு செய்கின்ற நேரத்தில், குறைந்த அளவே பங்குள்ள மாநில அரசு ஒல்லும் வகையில் மக்களின் நலன் கருதித் தன்னிடம் எதிர்பார்க்கப்படுகின்ற அனைத்தையும் ஆற்றியுள்ளதா என்பதை இம்மாமன்றம் ஆய்வு செய்தால், அது நனிமிகப் பொருத்தமானதாக இருக்குமென நம்புகிறேன்.

காதில் விழுந்தது !

"தமிழ்நாடு காங்கிரசின் புதிய தலைவர் அமெரிக்கா போகப்போகிறாராமே?"

"ஆமாம்; நான்கூட நேற்று செய்தியில் படித்தேன்; மார்ச் மாதம் 2-ந் தேதி புறப்படுகிறாராம்!"

"இங்கு இந்தச் சமயத்தில் இருப்பதை விட்டுவிட்டு அப்படி என்ன அமெரிக்காவில் தலைபோகிற வேலையாம் ?"

"போகிறார், மற்றொரு வேலையை முன்னிட்டு; அதாவது 'ஆகாய விமானத் துறையின் ஆராய்ச்சி பற்றிய குழுவின் தலைவர்' என்ற முறையில்; இருந்தாலும், இப்போது நீ கேட்டாயே ஒரு கேள்வி—அது,என்னை வேறொரு சிந்தனைக்கு இழுத்துச்செல்கிறது!"

"அதையும்தான் சொல்லேன்—நானும் தெரிந்து கொள்கிறேன்!"

"'பிரச்சினைகள் வரும்போதெல்லாம் அண்ணாதுரைக்கு ஏதாவது வியாதியும் வந்துவிடும்' என்று செங்கற்பட்டில் ஓ.வி. அழகேசன் பேசியிருப்பது தெரியுமா?"

"என்ன, 'தெரியுமா' என்று கேட்கிறாய்? இப்படியும் தரம் குறைந்து பேசத் துணிந்துவிட்டாரே' என்று நான் பட்ட வேதனை...!"

"அதைத்தான் நானும் பெற்றேன்; இருந்தாலும் இப்போது நாமும் இப்படித் திருப்பிக் கேட்கலாமல்லவா—'சுப்பிரமணியம், மொழிப் பிரச்சினைக்குப் பயந்துகொண்டுதான் தலைமறைவாகத் தூரத் திசை போகத் துணிந்துவிட்டார்' என்று! 'முக்கியமான ஒரு நேரத்தில்—தலைவர் பொறுப்பை ஏற்றவர்—முக்கியமான ஒரு பிரச்சினை விவாதத்தில் இருக்கும்போது அமெரிக்கா போவது, தற்காலிகமாகத் தப்பித்துக்கொள்ளத்தான்' என்று அவர்கள்—தி.மு.க.-வினர், பண்புகருதி கேட்காவிட்டாலும்—நடுநிலையோடு உள்ளவர்கள் கேட்கலாமல்லவா?"

"உங்களைப்போலவே நானும் வாதத்துக்காகவே பேசுகிறேன்; பிரச்சினைகள் வரும்போது உடல் நிலை கெடுவது,இயற்கைக்கு ஒவ்வாத அதிசயம் ஒன்றுமில்லையே! நேருவின் திடீர் உடல் நலக் குறைவுக்கு அவ்வப்போது டாக்டர்கள் கூறிவந்த காரணம், 'அவர் மேற்கொண்டிருந்த அதிகப்படியான சிரமங்கள் தான்' என்பதுதானே! தன்னை வந்து சந்தித்த சுப்பிரமணியத்திடம், முதலமைச்சரே சொல்லியதும் அதுதானே; சுப்பிரமணியம் கலந்துகொள்ளும் கூட்டங்களில் அமைதி நிலை குலைந்து வருவது பற்றித் தாம் கொண்ட அதிர்ச்சி தான் உடல்நலக் குறைவுக்குப் பாதி காரணம்—என்று தானே அவரிடமே கூறினார்?"

"இதையெல்லாம் சிந்தித்திருந்தால் ஓ.வி. அழகேசன், 'தாம் ஒரு முன்னாள் அமைச்சர்' என்பதையும் மறந்துவிட்டு இப்படித் தரக்குறைவாக ஏன் பேசியிருக்கப் போகிறார்? அமைச்சர் பதவி வகித்த அழகேசன் போன்றவர்களே இப்படிப் பேச ஆரம்பித்திருப்பதனால் தான் அவரது கட்சியினர் நடத்திய 'சனநாயக' ஊர்வலத்தில், கழக அமைச்சர் ஒருவரது உடல் சுற்றளவும் முழக்கமாகியது! காங்கிரசு இந்தக் கடைநிலைக்குப் போயிருக்க வேண்டாம்!"

—எஸ். ஆர்.

தமிழகத்தில் மலையேறும் பயிற்சி நிலையம்

'தேவை இல்லை' என மத்திய அரசு கருத்து

சென்னை, பிப். 28—

"உதகமண்டலத்தில் மத்திய அரசின் உதவியுடன் மலையேறும் பயிற்சிக் கழகம் துவக்கும் எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை"

என்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமியின் கேள்விக்கு, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பதிலளித்தார்.

மேலும் துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது :—

"உதகமண்டலத்தில் 14—4—67 முதல் 25—5—67 வரை உத்தரப் பிரதேச மலையேறும் பயிற்சி நிலையத்தின் உதவியுடன் 72 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

"இப்படி ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயிற்சி வகுப்பு நடத்தினால் போதும் என்றும், மலையேறும் பயிற்சிப் பள்ளி எதுவும் ஏற்படுத்தத் தேவையில்லை என்றும் இந்தியப் பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது."

பெண்கள் கல்வி பெறுவது நாட்டுக்கே பெருமை!

அறிவாளர் தொகையறிந்தே அயலாரின் மதிப்பும் கிடைக்கும்

எத்திராஜ் கல்லூரி விழாவில் முதலமைச்சர் அண்ணா ஆய்வுரை

சென்னை, பிப். 28—

“ஒரு நாட்டின் நிரந்தரப் பெருமைக்கும் நிலையான செல்வத்துக்கும் ஊன்றுகோலாக இருப்பது கல்வியே! ‘எத்தனை மருத்துவர்கள் இருக்கிறார்கள்; எத்தனை பொறியியல் வல்லுநர்கள் இருக்கிறார்கள்; எத்தனை பேராசிரியர்கள் இருக்கிறார்கள்’ என்றுதான் எந்த நாட்டிலும் கேட்பார்கள்; அவர்கள் ஈட்டித்தருகிற வெற்றிதான் நாட்டின் பெருமையை உயர்த்த முடியும்!”

இவ்வாறு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சென்னை எத்திராஜ் கல்லூரியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள் :—

சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் கல்லூரி நாள், பிப். 26-ல் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமைவகித்து உரையாற்றினார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை கல்லூரி முதல்வர் வரவேற்றுப் பேசினார்.

பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்ற மாணவிகளுக்கு இராணி அம்மையார் பரிசுகள் வழங்கினார்.

அசோகா—‘அமுதசுரபி’ ஏடு நடத்திய இக்கியக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற எத்திராஜ் கல்லூரி மாணவி நித்தியகல்யாணிக்கு, ரூ. 500-க்கான காசோலையை பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கினார்.

இப்போட்டியாளர் சார்பில், கல்லூரிக்கு நூல் வாங்கிக் கொள்வதற்காகத் தனியாக ரூ. 200 அண்ணா அவர்கள் மூலம் வழங்கப்பட்டது.

பின்னர், காலஞ்சென்ற புகழ்மிகு வழக்கறிஞர் எத்திராஜ் அவர்களுடைய உருவப்படத்தை, கல்லூரி மண்டபத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்துவைத்துப் பேசுகையில் உரையாற்றியபோது குறிப்பிட்டதாவது :—

“காலஞ்சென்ற எத்திராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த மண்டபத்தில் திறந்துவைப்பதற்காக நான் 'மகிழ்ச்சியடைகிறேன். அவர் திரட்டிய பெருஞ் செல்வத்தை, மகளிர் கல்லூரிக்காகக் கொடுத்து உதவியது எல்லோராலும் பாராட்டத்தக்கதாகும்.

அவருடைய சட்ட நுணுக்க ஆராய்ச்சியும், தெளிவும் கனிவும், தமிழகத்தில் உள்ளவர்களுக்கு மிக நல்லமுறையில் விளங்கும்.

கல்வித் துறையின் வளர்ச்சிக்காக அரசினர் காட்டிவரும் அக்கறையோடு எத்திராஜ் போன்றவர்களும் கொடுத்து உதவிய பெருநிதியால்தான் தமிழகத்தில் இது போன்ற பல அறிவாலயங்கள் உருவாக முடிந்தது.

ஆடவர்களைவிட ஆரணங்குகள் கல்வி பெறுவதால், ஒரு குடும்பத்தையே சிறப்பாக்கும் பணியை ஏற்றுக்கொண்டுவிடுகிறார்கள்.

ஒரு கல்லூரிக்குக் கிடைக்கும் நல்ல பெயர், அந்தக் கல்லூரியில் பயிலும் மாணவ—மாணவிகளின் திறமையை பொறுத்துத்தான் இருக்கிறது.

கல்வியில் முன்னேற்றம் அடையாவிட்டால் நாடு முற்போக்கையே அடைய முடியாது!

மாணவிகள் கல்வியில் தேர்ச்சி பெற்று நாட்டுக்கும் ஏற்றத்தைப் பெற்றுத் தருகிறார்கள்.

இங்கே பயிற்சி பெற்ற மாணவிகள் தனித் திறமையோடு விளங்குகிறார்கள் என்பதை கல்லூரி முதல்வர் எடுத்துக் கூறினார்.

மகளிர் குலத்திற்குத் தெளிவும் கனிவும் இயல்பாக அமைந்து இருக்கின்றன; அதை இன்னும் சற்று வளர்த்துக்கொள்வதற்குக் கல்வித் துறையில் மகளிர் ஈடுபடுவது அவசியமாகும்; அப்போதுதான், அவர்கள் பெற்ற தெளிவும் கனிவும் சமூகத்திற்கு மிகுந்த பயன் தரும்.

‘பெண்களுக்குக் கல்வி தேவையில்லை’ என்ற ஒரு காலம் இருந்தது; அதை இப்போது சிறுகதையில் எழுதினால்கூட யாரும் நம்பமாட்டார்கள்.

இப்போது, பெண்கள் படிக்க ஆரம்பித்தவுடன் பலனைக் காண்கிறோம். கல்வித் துறையில் பெண்கள் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள்.

அவர்கள் எந்தத் துறையில் ஈடுபட்டாலும், திறமையோடு விளங்குகிறார்கள்! ஆடவர்களைக் காட்டிலும் அதிக வெற்றியைப் பெறுகிறார்கள்; மருத்துவத் துறையிலும், ஆசிரியத் துறையிலும் பெண்கள் முழுவதுமாக ஈடுபட்டால் மிகுந்த பயன் தரும்.

மருந்தைவிடக் கனிவுதான் நோய்க்கு மருந்தாகும்; அப்படிப்பட்ட கனிவு இயற்கையாக மகளிரிடம் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

திருவள்ளுவரை எந்த அளவுக்குப் பாராட்டுகிறோமோ அதற்கு ஒப்பாக ஔவையாரையும் தமிழகம் கருதியிருக்கிறது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தில் எந்த நாட்டிலும் பெண்பாற் புலவர்கள் இருந்தது இல்லை, அப்போது தமிழகத்தில் புலவர்கள் இருந்திருக்கிறார்கள்.

ஒரு நாட்டின் தனிச் சிறப்பு—நிலையான பெருமை அந்த நாட்டிலுள்ள இலக்கியக் கர்த்தாக்களையும், சுற்றறிவாளர்களையும் பொறுத்திருக்கிறது; அதை வெறும் அரசியல்வாதிகளால் மட்டும் பெற்றுவிட முடியாது!

வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நேரத்தில், ‘உங்கள் நாட்டில் எத்தனை அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்’ என்று யாரும் கேட்பது இல்லை!

‘எங்கே மந்திரிகள் அதிகமாக இருக்கிறார்களோ, அந்த நாட்டில் திறமை அதிகமாக இருக்கும்’ என்று யாரும் கணக்கிடுவது இல்லை!

அப்படிக் கணக்கு எடுக்கப்படுமானால், பீகார் மாநிலத்துக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்!

இந்த நாடு ஏழ்மை நிரம்பிய நாடாக இருந்தாலும், வள்ளல் தன்மை உள்ள நாடாகும்!

தன்னுடைய நலத்தைக் குறைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு உதவுவதில் அக்கறை கொண்டவர்கள் இங்கே இருக்கிறார்கள்! அவர்கள், தங்களைத் தாங்களே தியாகம் செய்கிறார்கள்!

என்னுடைய அனுபவத்தில்—நான் படித்தபோது—இப்படிப்பட்ட கட்டிடம் இருந்தது இல்லை.

என்னுடைய சரித்திரப் பேராசிரியர், உலகத்திலுள்ள பெருவீரர்களைப் பற்றியெல்லாம் சொல்லும்போது, வெளியே, 'எட்டணா—ஆறணா' என்று பண்டங்களின் விலையைக் கூறுவதும் காதில் விழும்; இரண்டுக்கும் இடையில் நான் கல்வி கற்றேன்; இன்று அந்த நிலை இல்லை!

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று சொல்லுவார்கள்; ஆனால், இன்று, 'யாம் பெருததை எம்முடைய மக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

உள்ளாட்சி மன்ற நிர்வாகச் சீரமைப்பு

அரசு ஆராய்ந்துவருவதாக அமைச்சர் தகவல்

சென்னை, பிப். 28—

“தமிழகத்தில் உள்ளாட்சி மன்ற நிர்வாக முறையினைச் சீரமைப்பது பற்றி திரு. முருகேச முதலியாரின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் நகல் சட்டமன்றத்தில் உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது; கட்சித் தலைவர்களின் கருத்துக்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துக்களும், மத்திய அரசின் சமுதாயத் துறை அமைச்சகத்தின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டு, எல்லாவற்றையும் அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்”

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, சட்டமன்றத்தில், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

உற்சாகம்தரும்வகையில் இயங்கும் அரசு போக்குவரத்து

அரை காசு கட்டண உயர்வு செய்வதால் மக்களுக்குப் பாதிப்பு இல்லை

சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, பிப். 28—

“1—3—67-ல், தமிழக அரசின் நெடுஞ்சாலை தொலைவு விரைவு வண்டிகள் 170 இருந்தன; அவற்றில் 127 ஓடின.

“31—5—67-ல் 175 இருந்தன—135 ஓடின.

“1—3—67 அன்று நெடுந் தொலைவு விரைவு வண்டிகளின் மூலம் கிடைத்த வசூல் தொகை ரூ. 38,065; 31—5—67 அன்று கிடைத்த தொகை ரூ. 51,581 ஆகும்.

“1—3—67-ல் நடைமுறையிலிருந்த நெடுந்தொலைவு விரைவு வண்டியின் கட்டண விகிதம் சமவெளிப் பகுதியில் மைலுக்கு 6 காசு; மலைப்பகுதியில் 12 காசு; 31—5—67-ல் சமவெளியில் 5 காசாகவும் மலைப்பகுதியில் 10 காசாகவும் இருந்தது”

என்ற தகவலை, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றத்தில், திரு. காசிராமன் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் பல துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

“அரசுப் பேருந்துகளின் கட்டணத்தை 2 காசிலிருந்து 2½ காசாக உயர்த்தியதும் பொதுமக்களின் நலனை முன்னிட்டுத்தான்; எப்படியென்றால், தனியார் பஸ் முதலாளிகள் மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, அரசு தனது பஸ் கட்டணத்தை கிலோ மீட்டருக்கு 2 காசிலிருந்து 2½ காசாக உயர்த்திக்கொண்டால், தாங்களும் 3 காசிலிருந்து 2½ காசாகக் குறைத்துக்கொள்வதாகத் தனியார் துறையினர் கூறினர்.

“இப்போது அரசுக்குச் சொந்தமான பேருந்துகள் 200—300 அளவில்தான் இருக்கும்; ஆனால், 3,000-த்துக்குமேல் தனியார் துறையில் உள்ளன; எனவே, அதிகமான அளவில் ஓடும் தனியார் பஸ்களில் கட்டணக் குறைப்பு ஏற்படுவதால் அதிக அளவில் பொதுமக்கள் பயன்படுவர். குறைந்த அளவில் ஓடும் அரசு பஸ்களின் கட்டண உயர்வு மூலம் அதிகம் பேர் பாதிக்கப்படமாட்டார்கள்.

“முன்பு நெடுந்தொலைவு விரைவு வண்டியின் கட்டணத்தை மைலுக்கு 6 காசிலிருந்து 5 காசாகக் குறைத்ததன் விளைவாக அதிகமான பேர் பயணம் செய்ய முன்வந்தனர்; அதனால் வருமானம் கூடியது. இப்போது 146 நெடுந்தொலைவு விரைவு வண்டிகள் ஓடுகின்றன.

“பஸ் துறையில் அரசு கடைபிடிக்கும் கொள்கை உற்சாகம் தரும் வகையிலேயே உள்ளது.”

தமிழகத்தில் மக்களாட்சி மலர்ந்த மார்ச் 6-ம் நாள்!

மகிழ்ச்சித் திருநாளாகக் கொண்டாடுக!

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் வேண்டுகோள்

சென்னை, பிப். 29—

சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் தோழர் நீலநாராயணன், மார்ச் 6-ம் நாள் பற்றி மாவட்டத் தோழர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டிருப்பதாவது :—

‘சூரியன் எப்போது தோன்றிற்று’ என்பது விஞ்ஞான விவகாரம்; ஆனால், உதயசூரியன் தனது முழுக் கதிர்களையும் விரித்துப் பரப்பிப் பேரொளி பாய்ச்சிய பொன்னாள், ‘மார்ச் 6’ என்பதுதான் நாம் கண்கூடாகக் கண்ட உண்மை!

வள்ளுவன் தனது அருங்குறளை எப்போது யாத்து—என்று அரங்கேற்றினான் என்பது, ஆராய்ச்சியாளர் விவகாரம்; ஆனால் அந்தக் குறள் தனது முழு அழகையும் பொருளையும் வெளிக்காட்டி மோனச் சிரிப்பில் நம்மை மூழ்கடித்தது—மார்ச் 6-ல் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் அறிவான்!

மங்கல ஒலியும், மஞ்சள் வாசமும், புனலிடை மூழ்கிப் புத்தாடை புனைந்த பெருமிதமும் தமிழகத்தின் ஒவ்வோர் இல்லத்திலும் நீக்கமற நிறையச் செய்தது மார்ச் 6!

இமய விளிம்பிலே இலச்சினைப் பொறித்த நாளன்று இந்தத் தமிழகம் எவ்வாறு குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும் என்பதைச் சரியாக யாரும் நமக்கு எடுத்துச் சொல்லிப் போகவில்லை; ஆனால் அத்தகு நாளுக்கு இணையான—கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மார்ச் 6-ஐ நாம் கொண்டாடி, வருங்காலச் சந்ததிகளின் நினைவில் நீங்காத இடம் அமைப்போம்!

நமது இன்பத் திருநாள்—இந்த நாள், தமிழனுக்கு அரசியல் விடுதலை நாள்! பொருளாதாரத்தில் புதுப் போக்கினைக் காண்பதற்கு வகை செய்த நாள்! ஏற்றத்தாழ்வையும் இழிந்த நிலையையும் எதிர்க்கத் தமிழர்கள் திரண்டு அணிவகுத்த நாள்! தமிழக மக்கள் ஒவ்வொருவரும் அன்று புதுப்பிறவி எடுத்த பொன்னாள்!

அன்றுதான் நமது அருமை அண்ணன்—தென்னகத்துப் பெருந்தலைவர்—பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் கழக ஆட்சி அமைந்தது!

சரித்திரங்கண்ட கரிகாலப் பெருவளத்தானின் பீடுடைத் தமிழர் ஆட்சிக்குப் பின், சரித்திரப் புகழ் பாடப்போகும் அண்ணாவின் தமிழ் ஆட்சி அமைந்த அந்த நாள், தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் மகிழ்ந்து கொண்டாட வேண்டிய திருநாள்—பெருநாள்—விழா நாள்!

கழக விழாக்கள் எடுப்பதில் தங்களுக்கெனத் தனி முத்திரை ஏற்படுத்திக்கொண்டுள்ள சென்னை மாவட்டத்துத் தீரர்காள்! கழக ஆட்சி அமைந்த ஆண்டு நிறைவு நாள் மார்ச் 6-யும் பெருஞ் சிறப்பாகக் கொண்டாட இன்றே முனைந்து செயலாற்றுங்கள்!

ஒவ்வொரு வட்டத்தையும் சார்ந்த கிளைகள்—துணை மன்றங்கள்—அத்தனை அமைப்புகளின் நிர்வாகிகளும், தோழர்களும் தத்தமது கடமைகளைச் செய்து, மார்ச் 6—விழா நாளைச் சிறப்புறக் கொண்டாடுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்று வீடெங்கும், தெருவெங்கும், நகரெங்கும் வெற்றித் தோரணங்கள்—விழா நாளின் மாண்புகள்—பசித்தோர்க்கு உணவளித்தல்—பள்ளிச் சிறார்களுக்குப் பாடப்புத்தகம், பலகை, பலப்பம் அளித்தல்—கழக அரசின் ஓராண்டுச் சாதனைகளையும் கழகக் கொள்கைகளையும் விளக்கும் கூட்டங்கள்—இசை நிகழ்ச்சிகள்—இன்ன பிற அனைத்தும் இருக்குமாறு ஏற்பாடு செய்யுங்கள்.

- ★ ஒழிந்த உணவு பற்றாக் குறை—
- ★ வீழ்ந்த விலைவாசிகள் விவரம்—
- ★ பசித்தோரை வாழ்விக்கும் படி அரிசித் திட்டம்—
- ★ தொழில்கள் பெருக்கம்—தொழிலாளர் நலன் பேணும் மாண்பு—
- ★ எரிந்த குடிசைகளுக்குப் பதிலாக எரியாத வீடுகள் அமைத்துக் கொடுத்த சிறப்பு—
- ★ இந்திக்கு இங்கு இடமில்லை என்றுரைக்கிய தீரம்—எங்கும்—எதிலும் தமிழே என வரையறுத்த வீரம்—

அத்தனையும் கழக அரசின் ஓராண்டுச் சாதனையில் ஓங்கியுள்ள சிறப்புக்களைத் தொகுத்துச் சொல்லுங்கள்—எடுத்து முழக்குங்கள்!

காங்கிரசு அமைச்சரின் அறியாமை!

சட்டமன்றங்களில் உறுப்பினர்கள் பொருத்தமில்லாமல் கேள்விகள் கேட்பதும், அதற்குக் காங்கிரசு அமைச்சர்கள் பொறுப்பில்லாமல் விடைகள் கூறுவதும், அன்றாட நிகழ்ச்சிகளாக ஆகிவருகின்றன!

அண்மையில் கருநாடக மாநிலச் சட்டமன்றத்தில், அமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே, 'இங்கிலாந்தின் தலைமையமைச்சர், சட்டமன்றத்தில் தமது கட்சியின் தலைவராகவும் இருக்கிறார்' என்று கூறியதைத் தொடர்ந்து ஓர் உறுப்பினர், ‘ஆம்; ஆனால் அவர், தலைமையமைச்சர் என்ற முறையில் சம்பளம் பெறுவதில்லையே’ என்று கூறியிருக்கிறார்!

“இங்கிலாந்தின் தலைமையமைச்சர் ஹெரால்டு வில்சன், சட்டமன்றத்தில் தமது கட்சியின் தலைவரும் அல்ல—அவர், ‘கட்சித் தலைவர்’ என்ற முறையில் சம்பளமும் பெறுவதில்லை” என்பதை ஒரு பத்திரிகையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

முதல் நிதியமைச்சர்!

[எஸ். ஆர்.]

மொரார்ஜி தேசாய்க்கு ஒரு நாள் முன்னதாக தமிழக நிதி நிலை அறிக்கையினை வெளியிட்டிருக்கும் தமிழக முதல்வர் அண்ணு அவர்கள், மற்ற மாநில நிதிநிலை அறிக்கைகள் எங்கெங்கு பேசப்படுகின்றனவோ அங்கெல்லாம் நடுநாயகமாக இருக்கப் போகிருர் !

கழக நிர்வாகத்தின் இரண்டாவது நிதிநிலை அறிக்கையிலேயே அண்ணு அவர்கள், இருபதாண்டுக் காலத்தில் இல்லாத சாதனைகளைக் காட்டியிருப்பது, மத்திய ஆட்சியில் இன்னும் தொடர்ந்து நீடித்துவரும் காங்கிரசு நிர்வாகத்துக்கு ஒரு பாடப் புத்தகமாகவும் விளங்க இருக்கிறது !

'அரசியலில் பொருளாதாரம் எப்படிக் கலந்திருக்கிறது; பொருளாதாரத்தில் அரசியல் எப்படி நுழைகிறது' என்றெல்லாம் அதிசயிப்பவர்களுக்கு, தமிழக அரசின் இந்த நிதிநிலை அறிக்கை புதிய தெளிவினைக் கொடுப்பதாக அமைகிறது !

வரவு–செலவுப் புள்ளிவிவரங்களும், அதையொட்டிய கூட்டல்—கழித்தல்களும் மட்டுமே கொண்டது 'பட்ஜெட்'—என்று கருதி வந்தவர்கள், அதில், 'ஒற்றுமை காண்பதற்கு வழி இருக்கும்; வலிவான மத்திய அரசு அமைவதற்கான வழிவகை இருக்கும்; அதேபோது, அதிக அதிகாரங்களை மாநிலங்கள் எப்படிப் பெறலாம் என்பதற்கான மார்க்கங்களும் இருக்கும்' என்ற உண்மைகளை, கழக அரசின் இந்த இரண்டாம் நிதிநிலை அறிக்கையில் எளிதில் உணருவதற்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது.

நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்து, சட்டமன்றத்திலும், மேலவையிலும் நிகழ்த்தப்பட்டிருக்கும் முதலமைச்சரின் உரையில் காணப்படும்—

> "மக்களுக்கு மிக நெருங்கியது—மக்கள் உணர்வுகளை நேர்முகமாக உணரவல்லது மத்திய அரசு என்பதைவிட, மாநில அரசுகள்தான் என்பது எமது எண்ணம். மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களிடையே 'திருப்தி' நிலை நிலவச் செய்யவல்லவை மாநில அரசுகளே ; இந்த அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுபவர்களுக்கு, 'அதிகாரம், நிதி வசதி இரண்டும் மாநிலங்களுக்கு ஏன் இன்னும் அதிகம் வேண்டும்' என்ற உண்மை புலப்படும்"

என்ற அறிவுரை, இந்திய அரசியலின் இன்றையத் தேவையினை, மென்மையின் உச்சியில் நின்று உறுதியாக வலியுறுத்திக் காட்டும் தத்துவ விளக்கமாகும்.

'காங்கிரசல்லாத ஒரு நிதியமைச்சர்' என்ற முறையில் இல்லாமல்—'கழக நிர்வாகத்தின் முதலமைச்சர்' என்ற தகுதியிலும் நில்லாமல்—

'மத்திய - மாநில அரசுகளிடையே உள்ள பொதுவான அரசியல், நிதிமுறை உறவுகளை ஆக்கபூர்வமான முன்னேற்றங்களுக்கும், நிரந்தரமான தன்மைக்கும் உண்டான வழிவகைகளை ஆராயும் முறையில் வந்துள்ள நிதிநிலை அறிக்கை, இது தான் முதலாவதாகும்" என்று கூருதவர்கள் இருக்கமுடியாது !

மக்களிடையே நேரிடைத் தொடர்பு இல்லாத ஒரு மத்திய அரசு, மாநில அரசுகளின் நிதிநிலைகளை மட்டும் எப்படிச் சுற்றிவளைத்துத் தனது கைப்பிடிக்குள் வைத்திருக்கிறது என்பதனை, அண்ணுவின் நிதிநிலை அறிக்கை பூர்வாங்கமாக விளக்குகிறது.

★ மாநிலத்துக்கென மத்திய அரசின் வரிகள் மூலம் தரப்படும் பங்கில் தமிழகம் புதுடில்லிக்குத் தரவேண்டிய வட்டித் தொகை மட்டும் 44 சதவிகிதத்தினை ஜீரணித்துவிடுகிறது !

★ ஏற்கனவே தமிழகம் தரவேண்டிய கடனுக்காக மத்திய அரசு புதிதாகத் தரவேண்டிய புதிய கடன்களில் 'நேர் செய்வதன்' (Adjustment) மூலம் மட்டும் 76 சதவிகிதம் கணக்கில் வருகிறது—ஆனுல், கைக்கு வருவதில்லை !

★ 1950-ம் ஆண்டுவாக்கில் மத்திய அரசுக்கு இந்த மாநிலம் தரவேண்டிய கடன் மதிப்பு, ரூ. 14 கோடியாகும்; இப்போது அது. ரூ. 300 கோடியாக உயர்ந்திருக்கிறது!

★ 1955—56-ம் ஆண்டுவாக்கில் மத்திய அரசு, தனது கடன்களுக்காக மாநில அரசிடமிருந்து வசூலித்த வட்டி விகிதம் 2.5 சதவிகிதம் ; இப்போது அதன் உயர்வு 4.5 சதவிகிதமாகும் !

★ இதனுல், 1950—51-ம் ஆண்டுவாக்கில் இந்த மாநிலம் தந்துகொண்டிருந்த வட்டித் தொகையான ரூ. 41 இலட்சம், இப்போது 15 கோடி ரூபாய்களாக வளர்ந்துள்ளது !

★ இந்த ஆண்டு தமிழகம் புதுடில்லிக்குத் திருப்பித் தரவேண்டிய குறுகியகால கடன் தொகை ரூ. 20.3 கோடி ; இதுவே அடுத்த ஆண்டில் ரூ. 27.3 கோடியாக உயர இருக்கிறது !

இத்தனை உண்மைகளையும் படிப்பவர்களில் பதட்ட உணர்ச்சி படைத்தவர்கள் சிலர், 'இது என்ன—மத்திய அரசா ? மார்வாரிக் கடையா ?' என்று கேட்கத்தான் செய்வர் !

அதுபோன்ற ஒரு களங்கம் வருவதை, புதுடில்லி, 'எப்படித் தவிர்த்துக்கொள்ளலாம்' என்பதற்கும் முதலமைச்சர் அண்ணு அவர்கள், பக்குவமான மருந்து ஒன்றை, இனிப்புப் பூச்சுடன் தந்துள்ளார்—

★ வெளிநாடுகளில் நீங்கள் (புதுடில்லி அரசு) கடன் பெறும்போது என்னென்ன சலுகைகள் கேட்டிருக்கிறீர்களோ—பரிவுகளை விரும்புகிறீர்களே—அவை இரண்டினையும் திருப்பி மாநிலங்களுக்குக் காட்டுங்கள் !

★ மாநிலங்களுக்காக வழங்கும் கடன்கள் கூடுமானவரையில், 'மென்மை'யானவையாக இருக்கட்டும் ; அதாவது, வட்டி விகிதத்திலும், திருப்பித் தரும் காலக்கெடுவிலும் நியாயமான வசதிகளைக் கொண்டதாக இருக்கட்டும் !

மத்திய அரசின் பார்வைக்கு இதைவிட உடன்பாடான யோசனைகளை இவ்வளவு மென்மையாக வேறு எந்தக் காங்கிரசல்லாத முதலமைச்சரிடமிருந்து எதிர்பார்க்க முடியும்?

"மத்திய அரசின் மீது குற்றச்சாட்டுகள்தானு? வழக்கத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லையா?" என்ற விமர்சனக் குரல், காங்கிரசுத் தரப்பிலிருந்து நேற்று மாலையே வந்திருப்பதனைப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மாநில அரசுக்கான கடமைகளை முடித்த நிலையில் தான் அண்ணு அவர்கள், தமிழகத்துக்கான உரிமைக்குரலை எழுப்பியுள்ளார்.

★ இந்த ஆண்டுக்கான முதலீட்டுத் தொகை ரூ. 85.25 கோடி என ஏற்கனவே மதிப்பிடப்பட்டிருப்பதற்கு மாருக, ரூ. 88.10 கோடி என இப்போது உயர்த்தப்பட்டிருப்பது, மத்திய அரசிடமிருந்து எந்தவிதப் புதிய - கூடுதல் உதவியுமில்லாமல் !

★ நான்காம் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக இத்துணைக்கண்டத்தின் திட்டக் குழு, தமிழகம் வசூலித்துத் தரவேண்டுமெனப் பணித்த வரித் தொகையில் 80 சதவிகிதம் வசூலிக்கப்பட்டிருக்கிறது ; அது மத்திய அரசுக்கென இந்த மாநிலம் - நலிந்த நிலையிலும் - நிறைவேற்றியுள்ள பொருளாதாரக் கடமையாகும் !

★ அது மட்டுமல்ல ; தேவையில்லாத திட்டங்கள் – உடனடிப் பலன் தராத திட்டங்கள் – அநாவசிய ஆடம்பரச் செலவுகள் குறைக்கப்பட்டிருக்கின்றன—அல்லது நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன !

★ பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு அன்புடன் அல்லது தண்டனையுடன் சொல்லுவது போல் மத்திய அரசு அவ்வப்போது கோபக் குரலுடன் பேசும் ரிசர்வ் பாங்கி 'ஓவர் டிராப்ட்' முறையை, பெருமளவுக்குக் குறைத்துள்ள முதல் மாநிலம் தமிழகம் தான்.!

நிதி நிலை அறிக்கையை அண்ணு அவர்கள் தாக்கல் செய்த அதே நாளில்தான் ஒரிசா அரசு 'ரிசர்வ் பாங்கியில் அதிகப் பற்றுத் தொகைகள் வாங்குவதைத் தவிர்ப்பதற்காக எல்லா இலாகாக்களிடமிருந்தும் வந்த செக் புத்தகங்களைப் 'பறிமுதல்' செய்து பத்திரப் படுத்தியது' என்ற செய்தியும் வெளியாயிற்று!

ரிசர்வ் பாங்கியிடம் அதிகப்பற்று வாங்குவதைத் தவிர்க்கும்படி மத்திய அரசு கூறுவதைப் பல காங்கிரசு மாநிலங்களே 'அசட்டை' செய்யும்போது கழக அரசு, பொருளாதாரப் பொறுப்புகளை உணர்ந்த வகையில் அதனை நிறைவேற்றியிருப்பதனை, பிரச்சியின் தன்மை புரிந்தவர்கள் மனமாரப் பாராட்டுவர் !

'அண்ணுவின் பட்ஜெட், உபரியான ஒன்று' என்று அதிகப்படியான ரூ. 74 இலட்சத்தை மட்டும் சுட்டிக்காட்டிப் பாராட்டிப் பயனில்லை !

எந்தெந்த இடர்பாடுகளுக்கிடையில் இந்த உபரி பட்ஜெட்டினை அவரது கரம் அளித்திருக்கிறது என்பதனை மேற்கண்ட முறையில் அணுகுவதுதான் நிதிநிலை அறிக்கையின் தன்மையினை உண்மையில் பாராட்டுவதாக அமையும்!

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்த நிலைமையினையும் இன்றும் மத்திய அரசின் மொத்த தவறுகளினுல் நாடு முழுவதிலும் பொதுவாக இருக்கும் நிலைமையினையும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதனை, அரசியல் நோக்கத்துக்காக வெறுக்கும் காங்கிரசுக்காரர்களைத் தவிர ஏனைய அனைவரும் தக்கதோர் முன்னுரையாகத்தான் மதிப்பார்கள் !

இந்த அடிப்படையில், இரண்டாவது ஆண்டிலேயே ரூ. 79.68 கோடியில் நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்திருக்கும் அண்ணு அவர்களின் நிர்வாகத்தில்—

★ கல்விக்கு, காங்கிரசு ஆண்டபோது இருந்ததைவிட ரூ. 13 கோடி—அதாவது மாநிலத்தின் வருவாயில் 23 சதவிகிதம் ;

★ ரூ. 7.24 கோடி செலவில் படி அரிசித் திட்டம் ;

★ ரூ. 10 கோடி அதிகச் செலவினைக் கொடுக்கும் அரசு ஊழியர்களுக்கான நகரஈட்டுப் படி உயர்வு ;

★ 1966—67-ம் ஆண்டைவிட 2 இலட்சம் டன் அதிக உணவு விளைச்சல் ;

★ இந்த ஆண்டைவிட 12 இலட்சம் அதிக ஏகர் நெல் சாகுபடி நிலம் ;

★ அதேபோல் மற்ற தானிய சாகுபடி நில அளவும் 1 இலட்சம் ஏகரிலிருந்து 1.7 இலட்சம் ஏகர்கள்வரை ;

★ பி.யு.சி.-போல், பாலிடெக்னிக் படிப்புக்கும் கட்டணச் சலுகை ;

★ இலங்கைத் தமிழர்களுக்கான மறு வாழ்வுத் திட்டம் ;

★ ஒரு கோடி ரூபாய் வருவாயைத் தரக்கூடியதும், ஏழை – நடுத்தர மக்களும் பங்கு கொள்ளக்கூடியதுமான பரிசுச் சீட்டு முறை ;

★ அடுத்த ஆண்டு தேசியமயமாகப்போகும் 106 பேருந்துத் தடங்கள்;

★ மின்சாரத்துறை வளர்ச்சிக்காக மேற்கொண்டு ரூ. 3.60 கோடி ;

★ 'இந்த ஆண்டில் மின்சார வெட்டு இராது' என்ற அறிவிப்பு ;

★ புதிய கல்லூரிகள்—அதிக ஆசிரியர்களுக்கான வேலைவாய்ப்புகள்;

★ சென்னை நகரக் குடிநீர்த் திட்டம்பற்றி திட்டக் குழுவுக்கு வேண்டுகோள் ;

★ சேலம் இரும்பாலைத் திட்டத்துக்கான உறுதியான சிபாரிசு !

★ 'போராடி' பெற்ற தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்துக்கான மகிழ்ச்சி—நன்றி.

ஆகிய இத்தனையும் கொண்ட நிதிநிலை அறிக்கையில், இரண்டே இரண்டு இல்லை—

ஒன்று : **புதிய வரி!**

மற்றொன்று : **பற்றுக்குறை!**

ஆனுல், இது இரண்டும் இருந்திருந்தால், 'அரசியல் முதலாகி' இருக்குமே—என்று எதிர்பார்த்த தமிழக எதிர்க் கட்சித் தலைவர், 'சாதாரண மனிதனைக் கவருவதாக பட்ஜெட் இல்லையே' எனக் கூறியிருக்கிருர்.

மேலே விளக்கப்பட்ட இத்தனை சாதக நிலைகளையும், 'வேண்டாம்' என வெறுக்கின்ற சாதாரண மனிதனை, இனி அவர்தான் உருவாக்கிக் காட்டவேண்டும் !

கருத்திருமனுக்கு, 'மேலே' உள்ள தமிழ்நாடு காங்கிரசின் தலைவரோ, 'இன்னும் சரியாகப் படிக்கவில்லை ; அவசரத்தில் பார்த்தேன் ; புதிதாக எதுவும் இல்லை' என்று, நேற்று மாலையே பேசியிருக்கிருர்.

சுப்பிரமணியம் மெதுவாக முழுவதையும் படித்துப் பார்ப்பதை யாரும் தடுத்து நிறுத்தவில்லை ! பொறுப்பு வாய்ந்த அரசியல் பதவியை வகிப்பவர், இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க நிலையில்—அதுவும், 'பட்ஜெட்' போன்ற முக்கியப் பிரச்சினைமீது இப்படிக் கருத்தறிவித்திருப்பது அவருக்கே அழகல்ல !

"கொடுத்த கடனுக்கு அவகாசம் தராவிட்டாலாவது, கள்ளுக்கடைகளைத் திறப்பாரா" என்று அரசியல் பசியுடன் இருந்த நிலைமையில், கள்ளுக்கடைகளையும் திறக்காமல்—கடனையும் முறையுடன் திருப்பித் தந்துகொண்டு—புதிய வரிகளும் ஏதுமில்லாமல்—பற்றுக்குறையையும் காட்டாமல்—அண்ணுவின் உபரி நிதிநிலை அறிக்கையை வெளியிட்டிருக்கும் இன்றைய இதழ்களிலேயே, மகாராட்டிரத்தில், மது, திறந்தவெளி விற்பனை' என்ற செய்திகளும் வந்திருப்பது, சாலவும் சிறந்த ஒன்ருகும் ! காங்கிரசுக்காரர்கள் எங்கே சென்று தங்களுடைய முகத்தைப் புதைத்துக் கொள்ளப் போகிருர்கள் என்பதனையும் கவனிக்கத் தூண்டும் செய்தியாகும்.

பொதுப் பணித்துறை அமைச்சரின் தலைமையில் நடைபெற்று வரும் அண்ணு கவியரங்கத்தில் தோழர் அப்துர் ரகிமான், 'அண்ணு முதலமைச்சர்' என்ற தலைப்பில், கேட்பவர்கள் கையொலி எழுப்ப—'அண்ணு அவர்கள், அமைச்சரவையின் முதல் அமைச்சர் மட்டுமல்ல—தமக்கே உரித்தான பல சாதனைகளினுல், தமிழகம் கண்ட 'முதல்' அமைச்சர்' எனக் கவிதை பாடுவார் !

அதே வகையில் கூறுவதென்ருல், இந்த இரண்டாம் நிதிநிலை அறிக்கை, அண்ணு அவர்களை, 'முதல் நிதியமைச்சர்' என்ற சிறப்புப் பெயருக்குச் சொந்தக்காரராக்கிவிட்டிருக்கிறது !

பெண்கள் கல்வி பெறுவது ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறட்டும்' என்று, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிருர்கள் ; அந்த அளவுக்கு அந்தத் தலைமுறை தியாகம் செய்துவருகிறது !

ஒரு தலைமுறை தன்னைத் தியாகம் செய்துகொண்டால்தான், இன்னொரு தலைமுறைக்குப் பலன் கிடைக்கும் !

குழந்தைகளுக்கு நோய் வந்தால், தாங்களே மருந்து சாப்பிடுகிருர்கள்—தாய்மார்கள் ! இத்தகைய தியாக உள்ளம், தாய்க்குலத்திற்கு உள்ளதைப்போல் வேறு யாருக்கும் இருக்க முடியாது !

ஆண்டுக்கு ஆண்டு மகளிர் கல்வி பெறும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கல்வித் துறையில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. மகளிர் நல்ல முறையில் கல்வியில் தேர்ச்சி பெற்று, இந்த நாட்டின் பெருமையை உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

திருச்சி வட்ட தி. மு. க. துணைச்செயலாளர்

சென்னை, பிப். 29—

திருச்சி வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் வி. எம். கணேசன், தமது சிகிச்சையை முடித்துக் கொண்டு இன்று இராயபுரம் மருத்துவமனையிலிருந்து வீடுதிரும்பினுர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.